1982 பிப்ரவரி 2]

கட்டிக் கொள்ள முயல வேண்டாம் என்று மற்ற துறைகளுக்கும் தெரிவித்து இருக்கிறோம். வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி நல்ல பூங்காவாக அமைக்க வேண்டும், அழகுபடுத்த வேண்டும், அப்படிச் செய்தால் மிக நன்றாக இருக்கும். வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கும், மற்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் பார்ப்பதற்கு அப்போது மிக நன்றாக இருக்கும் என்ற வகையில் ஒரு திட்டத்தை தீட்டி தர வேண்டும் என்று பொதுப் பணித் துறையிடம் கேட்டிருக்கிறோம். அவர்களும் விரைவில் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

அது தவிர, அங்காடிக்கான கட்டிடம் கட்டவிருப்பதாக நான் சொல்வது வள்ளுவர் கோட்டத்தின் பின் பக்கத்திலே. அதன் முன்னாலே இருக்கும் இடம் மிகக் குறுகலானது. அதிலே பல கடைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கடைகளை அப்புறப் படுத்த வேண்டும் என்ற திட்டத்தின் கீழ், பின்னாடி அங்காடிக் கான கட்டிடங்களைக் கட்டினால், வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கும் அவைகள் வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில், வள்ளுவர் கோட்டத்தின் பின்னாலே குடிசைகள் கட்டிக் கொண்டிருந்தவர்களை காலி பண்ணியிருக்கிறோம். அந்த இடத்திலேதான் அங்காடிகள் கட்ட வேண்டும் என்கிற திட்டம் இருக்கிறது.

திரு ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் வருடம் ஜுன் மாதத்தில் அங்கே வள்ளுவர் கோட்டத்தில் கட்சியின் சார்பாக ஒரு வார காலம் விழா எடுப்பதற்கான ஒத்திகை நடைபெற்றதற்கு...... (குறுக்கீடு-மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தில் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை எழுப்ப வேண்டாம். மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

திரு ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, அதற்கான வாடகை வசூலிக்கப் பெற்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்கிற கேள்விக்கு என்னிடத்திலே தகவல் இல்லை.

நகர்ப்புற கழிவு நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

*வினா எண் 7—திரு இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகர்ப்புற கழிவுநீர் விவசாயத்திற்கு நேர்முகமாக உபயோகிக்க ஆராயப்பட்டதா ?

(ஆ) இதை உபயோகிப்பதனால் எவ்வளவு ஏக்கர் பயிர் செய்ய நீர் வசதி ஏற்படும் ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து:

(அ) நகர்ப்புற கழிவு நீரை நேரடியாக உபயோகிப்பதனால் விஷக் கிருமிகளினால் ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே அதனை தெளிவுபடுத்தி தற்போது விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது நகர்ப்புற கழிவு நீரை பாசனமாகக் கொண்டு சுமார் 512 ஹெக்டேரில் பயிர்ச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இதனால் எவ்வளவு ஏக்கர் பயிர் செய்ய வசதி ஏற்படும் என்ற விவரத்தைக் கேட்டிருந்தேன். அதற்கான தகவல் அமைச்சரிடம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தேன் 512 ஹெக்டேரில் பயிர்ச் சாகுபடி செய்யப்படுகிறது என்று.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா? அல்லது அதற்கான சாத்தியக் கூறுகள் ஏதாவது இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மேலும் அபிவிருத்தி செய்ய திட்டம் இருக்கிறது. ஆனால் ஆராய்ச்சித் துறையினரின் கருத்துப்படி இந்தக் கழிவு நீரை சாகுபடிச் செய்ய அதிகமாகப் பயன்படுத்தினால், நிலத்தடி நீர் பாதிக்கப்படக்கூடும் என்ற எண்ணமும் இருப்பதால், இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கழிவு நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தி எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த கிராமங்களில் எத்தனை ஏக்கர்கள் நிலம் சாகுபடிச் செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது நகர்ப்புறங்களிலே செய்யப்படுகிற ஏற்பாடு.

1982 பிப்ரவரி 2]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர்ப்புற கழிவு நீரைக் கொண்டு, மதுரை மாநகரிலே அவிலியாபுரம் என்னும் இடத்திலே கால்நடைகளுக்கான தீவனம் மிகப் பெரிய அளவிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அது போலவே இதர நகர்ப்புறங்களிலேயும், கழிவு நீரைப் பயன் படுத்தி கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, சென்னை மாநகர், மதுரை மாநகர் கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் ஏனைய 17 நகராட்சிகளிலேயும், இப்படி நகர்ப்புற கழிவு நீரை பயன்படுத்தி புல் போன்ற கால்நடைத் தீவனங்களை, விளைவிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதை அதிகரிப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10.50.)

திரு ஏ. டி. குலசேகர்: கோவை நகரத்தில் வெள்ளலூர் பகுதியில் கழிவு நீருக்காக இதுவரை எவ்வளவு ஏக்கர்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

1979-80-ல் அரசு பண்ணைகளில் சாகுபடி செய்யப்பட்ட உணவுப் பயிர்களின் அளவு.

* வினா எண் 8—திரு என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பண்ணைகளில் 1979–80 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்கள் எத்தனை ஏக்கர்களில் சாகுபடி செய்யப் பட்டது?

(ஆ) அதன் உற்பத்தித் திறன் என்ன ?

(இ) அதனால் அரசுக்கு லாபமா ? நட்டமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) 4,366 ஏக்கர்கள்.

(ஆ)

பயிர்கள்.	சராசரி ஏக்கர் விளைச்சல். கிலோ.
நெல்	1,018
சிறுதானியம்	391
வீரிய ஒட்டு சிறுதானியம் ..	470
பயறு வகைகள் ..	61
காய்கறிப் பயிர்கள்	236

(இ) நட்டம்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS